வாழ்க ஒண்டிவீரன் புகழ்! வளர்க அருந்ததியர் ஒற்றுமை!!



# அருந்ததியர் சமுதாய மக்களுக்கு அன்பான வேண்டுகோள்



தமிழ்நாட்டில் தற்போது நடைபெறுகின்ற சாதிவாரி கணக்கெடுப்பின் போது தங்களது சாதி பெயர் என்ன? என்ற கேள்விக்கு அருந்ததியர் சமுதாயத்தை சேர்ந்த தெலுங்கு, கன்னடம் மொழி பேசுகின்ற அனைவரும்

# அருந்ததியர்

என்று மட்டுமே சொல்ல வேண்டும்.

---

நாம் பழக்கத்தில் சொல்லுகின்ற **சக்கிலியர், மாதிகா, மாதாரி, பகடை, தோட்டி** போன்ற உட்பிரிவுகளை சொல்லக்கூடாது.

---

கல்வி, வேலைவாய்ப்பில் அருந்ததியர் உள் இடஒதுக்கீடு 6 சதவீதமாக உயரவும், அருந்ததியர் சமுதாயத்தின் பலத்தை நிரூபிக்கவும். நமது உரிமைகளை பெறவும்...

# அருந்ததியர்

என்று மட்டுமே பதிவு செய்யுங்கள்.

இச்செய்தியை உட்கிராமங்களிலுள்ள நமது சமுதாய சொந்தங்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அன்புடன் : **என்.ஆர்.வடிவேல்** அமைப்பாளர்,

**அருந்ததியர் இளைஞர் பேரவை**

தொடர்புக்கு : 99946-65611, 98657 - 20665.

தினமணி 1, மே. 2018

# அருந்ததியர் எனக் குறிப்பிட ஆதித்தமிழர் பேரவை கோரிக்கை

ஈரோடு, ஏப்.30: சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பின்போது அருந்ததியர் உள்பிரிவுகள் அனைத்தையும் அருந்ததியர் என குறிப்பிட வேண்டும் என்று, ஆதித்தமிழர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

பெருந்துறை அருகே வாய்க்கால்மேடு பகுதியில் இப்பேரவையின் கூட்டம், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பேரவை மாவட்டச் செயலாளர் வீரகோபால் தலைமை வகித்தார். மாநில நிதிச் செயலாளர் ப.பெருமாவளவன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். 2009-ல் தமிழக அரசு அறிவித்த அருந்ததியர்களுக்கான 3.5 சதவீத உள்ஒதுக்கீட்டில் சக்கிலியர், மாதிகன், மாதரி, பகடை, தோட்டி, தொம்பன், ஆதி ஆந்திரர் உள்ளிட்ட உள்பிரிவுகளை இணைத்து ஒரே அட்டவணைப்படுத்தப்பட்டது.

அதேபோல, சமூகப்பொருளாதாரக் கணக்கெடுப்பின்போதும் இதே உள்பிரிவுகளை அருந்ததியினர் என்று குறிப்பிட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தினகரன்

# ஆதிதமிழர் பேரவை கூட்டம்

ஈரோடு, மே. 1: ஈரோடு அருகே பெருந்துறை வாய்க்கால்மேட்டில் ஆதிதமிழர் பேரவை மாவட்ட செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் வீரகோபால் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக மாநில நிதிசெயலாளர் பெருமாவளவன் கலந்து கொண்டு பேசினார். 2009ம் ஆண்டு தமிழக அரசு அறிவித்த அருந்ததியர்களின் 3.5 சதவீத உள் இடஒதுக்கீட்டின்போது அருந்ததியர் உட்பிரிவுகளை ஒரே அட்டவணைப்படுத்தி உள் ஒதுக்கீடு வழங்கியது. தற்போது சாதிவாரி கணக்கெடுப்பின்போது உட்பிரிவு சாதிகளை தவிர்த்து அரசு அறிவித்த அருந்ததியர் என கணக்கெடுப்பில் பதிவு செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய பொறுப்பாளர்கள் மாணிக்கம், கதிர்வேல், தேவராஜ், பாபு, சுரேஷ், ஞானக்குமார், பழனிவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கணக்கெடுப்பின்போது

# அருந்ததியர் என்றே குறிப்பிட வேண்டும்

## ஆதித்தமிழர் பேரவை வலியுறுத்தல்

ஈரோடு, மே. 1–

ஆதித்தமிழர் பேரவையின் மாவட்ட செயற்குழு கூட்டம் பெருந்துறையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வீரகோபால், ஒன்றிய பொறுப்பாளர்கள் மாணிக்கம், மாநில நிதி செயலாளர் பெருமாவளவன், கதிர்வேல், தேவராஜ், பாபு, சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அருந்ததியர்

கூட்டத்தில் தமிழக அரசு அருந்ததியர் உள்ஒதுக்கீட்டின்போது சக்கிலியர், மாதிகன், மாதாரி, பகடை, தோட்டி, தொம்பன், ஆதி ஆந்திரர் என்ற உள்பிரிவு சாதி களை இணைத்து ஒரே அட்டவணை படுத்தி அறிவித்தது. அதன்படி தற்போது நடைபெறும் சாதிவாரி கணக்கெடுப்பின் போது அருந்ததியர் சமுதாயத்தை சேர்ந்த உட்பிரிவினர் அந்த உட்பிரிவுகளை தவிர்த்து தமிழக அரசு அறிவித்த அருந்ததியர் என மட்டுமே கணக்கெடுப்பில் பதிவு செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

Edited and Published by **P.JEYAPANDY** for Malar Publications Ltd., 14, Natchiappa Street, Erode-638 001. and Printed by **J.P.VIJAYARAJ** at Thanthi press, 16, Natchiappa Street, Erode-638 001.

மாலை மலர்

தினத்தந்தி

2.5.2012

இதையடுத்து, அவர் வைத்த

## ஈரோடு மாவட்ட

# ஆதித்தமிழர் பேரவை செயற்குழு கூட்டம்

ஈரோடு, மே.2–

ஆதித்தமிழர் பேரவையின் ஈரோடு மாவட்ட செயற்குழு கூட்டம் பெருந்துறை வாய்க்கால்மேட்டில் நடை பெற்றது. மாவட்ட செயலா ளர் வீரக்கோபால் தலைமை தாங்கினார். ஒன்றிய பொறுப் பாளர்கள் மாணிக்கம், கதிர் வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில நிதிச்செயலாளர் ப.பெருமாவளவன் கலந்து கொண்டு பேசினார். சாதி வாரி மக்கள்தொகை கணக் கெடுப்பு பணி நடந்து வருவ தால், அருந்ததியர் சமுதாயத் தைச் சேர்ந்த உட்பிரிவு சாதி களான சக்கிலியர், மாதிகன், மாதரி, பகடை, தோட்டி, தொம்பன், ஆதி ஆந்திரர் போன்ற உள்பிரிவுகளின்பெ யரை குறிப்பிடாமல் தமிழக அரசு அறிவித்த அருந்ததியர் என மட்டுமே பதிவு செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.